இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப் படிப்பு திட்டம் 2006
தொடர் மதிப்பீட்டு பரீட்சை 1 மட்டம் 4
LWU 2313 – குடும்பச் சட்டம்
காலம்: 40 நிமிடங்கள்

திகதி: 04.09.2006 நேரம்: பி.ப 3.00 - பி..ப 3.40

ஒரு வினாவுக்கு மட்டும் விடை தருக.

தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்

1. "ஏதாவது ஒரு கடிதம் அல்லது ஆவனம் ஒன்றில் பயன்படுத்தப்பட்ட மொழி, திருமணம் செய்வதற்கான வாக்குறுதியை அவசியமாகவே உட்கிடையாக கொண்டிருப்பின் அது நியதிச் சட்டத்தின் கருத்திற்குட்பட்ட எழுத்திலான வாக்குறுதி ஒன்றாகும்".

Fisher C.J in Cooray V Cooray 1928, 30 N.L.R 310 at 312

திருமண வாக்குறுதி தொடர்பான இன்றைய சட்ட நிலைமையை இக்கூற்று சரியாக பிரதிபலிக்கிறதா என்பதை ஆராய்க.

2. திலகசிறி, பத்மா ஆகிய இருவரும் பொதுச்சட்டத்தின் கீழ் ஆழப்பட்டார்கள். திலகசிறிக்கு 21வயது ஆகவும் பத்மாவுக்கு 17 வயதாகவும் இருக்கும் போது அவர்களுடைய பெற்றோர் 1997ஆம் ஆண்டு இருவருக்கும் இடையில் திருமண ஏற்பாடுகளை செய்தனர். இரு குடும்பத்தவர்களுடைய உறவினர்கள், நண்பர்கள் முன்னிலையில் போருவ நிகழ்ச்சி நடைபெற்றது. அதன் பின்பு திலகசிறியால் வாடகைக்கு பெற்றுக்கொண்ட வீடு ஒன்றில் திலகசிறி, பத்மா இருவரும் கணவன் மனைவியாக வாழ்ந்தனர். திலகசிறி 1998ஆம் ஆண்டு வியாபாரம் ஒன்றை ஆரம்பித்து மிகக் குறுகிய காலத்தில் பணக்காரன் ஆனான்.

2003ஆம் ஆண்டு திலகசிறி விபத்தொன்றில் கொல்லப்பட்டான். இதனையடுத்து திலகசிறியினுடைய சகோதரன் திலகசிறியுடைய ஒரே வாரிசு தான் என்ற அடிப்படையில் திலகசிறியுடைய விருப்பாவனம்மற்ற சொத்து உரிமைகளை கூறி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளான் என்பதை பத்மா கண்டு பிடித்தாள். இன்றைய சட்டத்திற்கமைய இறந்த கணவனுடைய இறுதிவிருப்பாவனமற்ற சொத்துக்களின் உரிமையை சட்டரீதியான மனைவி மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும். பத்மா தன்னுடைய திருமணத்தின் வலிதான தன்மைபற்றி உம்மிடம் ஆலோசிக்கின்றாள்.

(அ) நியதிச்சட்ட ஏற்பாடுகள், தீர்ப்புச் சட்டங்கள் என்பவற்றைக் கொண்டு அவளுக்கு ஆலோசனை வழங்குக.

(ஆ) திலகசிறி, பத்மா இருவரும் கண்டியர்களாக இருந்து கண்டிய திருமண விவாகரத்து சட்டத்தின் கீழ் தமது திருமணத்தை பதிவு செய்து இருப்பின் உமது விடை வேறுபடுமா?

(பதிப்புரிமை பெற்றது)